விலை: சதம் 75 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 புரட்டாதி 7 துல்ஹஜ் 23 இதழ் 221
யாழ்ப்பாணம் புதன்கிழமை 23-9-1981

## "தடுப்புக் கட்டளையை மன்றின் பாதுகாப்பிலுள்ளவருக்கு எதிராகச் செயல்படுத்த முடியாது"

### சட்டமா அதிபருக்கு அறிவிப்பு

(நமது நிருபர் ஏ. வி. மாணிக்கம்)

(யாழ்ப்பாணம்)

"'தடுப்புக்கட்டளை, மன்றின் பாதுகாப்பில் இருக்கின்றவர்களுக்கு எதிராக செயல்படுத்த முடியாது. ஒருவர் மன்றின் பாதுகாப்பில் இருக்கின்ற போது, மன்று அவருடைய பாதுகாப்புக்கு பொறுப்பாக உள்ளது. சிறைச்சாலை அதிகாரி, மன்றினால் விளக்க மறியவில் வைக்கப்பட்ட சந்தேக நபர்களை, குறிப்பிட்ட தேதி மன்றில் கொண்டுவந்து ஒப்படைக்கவேண்டும்.''

பொய்ச்சாட்சியம் சிருஷ்டித்ததாக, இரு பொலிஸாருக்கு எதிரான வழக்கில், சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாதது தொடர்பான விசாரணையில் யாழ் நீதவான் ரி. ஜோகநாதன் அளித்த தீர்ப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் சார்ஜண்டாகக் கடமையாற்றிய வேலாயுதபிள்ளை, நிசேர்வ் பொலிசாராகக் கடமையாற்றிய இரகுநாதன், ஆகியோர் மீது பொய்ச்சாட்சியம் சிருஷ்டித்ததாக இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது. மேற்படி சந்தேக நபர் இருவரும் நீதிமன்

[6-ம் பக்கம் பார்க்க]

# சிறிமா மீதான மைத்திரி மனு: செலவுதொகையுடன் தள்ளுபடி

## அப்பீல் செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவிற்கு எதிராக திரு. மைத்திரிபால சேனநாயக்கா தாக்கல் செய்த மனுவை, செலவு தொகையுடன் கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி திரு. விமல் விக்கிரமசூரியா நேற்றுத் தள்ளுபடி செய்தார்.

திருமதி பண்டாரநாயக்கா, சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து தம்மை இடைநிறுத்தி வைத்திருப்பதைத் தடை செய்யுமாறு கோரி திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா இம் மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

திரு. அநுரா பண்டாரநாயக்கா சமர்ப்பித்த மனு தொடர்பாக ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கும்படி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவிற்கு கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி திரு. விமல் விக்கிரமசூரியா உத்தரவிட்டுள்ளார்.

திரு. மைத்திரிபால சேனநாயக்காவிற்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்யப்போவதாக திரு. மைத்திரிபால சேனநாயக்காவின் சிரேஷ்ட சட்டத்தரணி தெரிவித்தார். [வெ]

### வல்லைவெளிச் சம்பவம்:

## இருவர் வவுனிக்குளம் நடுக்காட்டில் கைது!

### பயங்கர ஆயுதங்களும் சிக்கின!!

[புலோலி]

வல்லைவெளி மூவர் மரணச் சம்பவம் தொடர்பாக, சந்தேக நபர்கள் இருவர் வவுனிக்குளம் நடுக்காட்டில் வைத்து வல்வெட்டித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன், சம்பவத்தின்போது பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் பயங்கர ஆயுதங்களான 3 துப்பாக்கிகள், 3 வாள்கள், ஒரு கத்தி 14 தோட்டாக்கள் தொண்டமானாறு செம்பாடு தோட்டத்திலிருந்து கைப்பற்றப்பட்டது.

வல்வெட்டித்துறைபொலிஸ் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்

[6-ம் பக்கம் பார்க்க]

## மனைவிமார் பொலிஸ் பாதுகாப்பு கோருகின்றனர்

[யாழ்ப்பாணம்]

வல்லைவெளியில் அண்மையில் நிகழ்ந்த கொலைச் சம்பவங்களுக்குள்ளானவர்களின் மனைவிமார் பாதுகாப்புக்கோரி யாழ் பொலிஸ் அதிபருக்கு முறையீட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு கப்பர்மலை வழக்கு சம்பந்தமாக இரு சிறைக் காவலர்களின் பாதுகாப்பில் 6 கைதிகள் பஸ்ஸில் கொண்டு செல்லப்பட்டதும், உப்பள ரோட்

[6-ம் பக்கம் பார்க்க]

## நேற்று நிகழ்ந்தது
## பட்டப்பகலில் சங்கிலி அறுத்தவர் பிடிபட்டார்

[யாழ்ப்பாணம்]

பட்டப்பகலில் பதினைந்தரைப் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிய நபர் கையும்மெய்யுமாக மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

மயிலிட்டியை சேர்ந்த சிற்றம்பலம் சற்குணலிங்கம் என்பவரின் தங்கச் சங்கிலியை நேற்றுப் பகல் சவரிமுத்து இயேசு என்பவர் இழுத்து அறுத்துக்கொண்டு ஓடியதாகத் தெரிவிக்கப்பட்டது. இவரை சற்குணலிங்கமும், வீதி வழியாக வந்தவர்களும் துரத்திப் பிடித்து. யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சி. யோகுகுமாரிடம் ஒப்படைத்தனர்.

யாழ். வின்சர் தியேட்டருக்கருகாமையில் இச்சம்பவம் நேற்று நிகழ்ந்தது. [மா]

### யாழ். மாவட்டத்தில்

## கிராமோதய சபை

### அக்.15-ல் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 176 கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலும் கிராமோதய சபைகள் அடுத்த மாதம் 15-ம் திகதி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவிருக்கிறது. ஒரே நாளில் ஒரே நேரத்தில் இச்சபைகள் ஆரம்பித்துவைக்கப்படும்.

யாழ். மாவட்டத்திலுள்ள 16 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் யாழ். மாநகர உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டும் இதனுள் அடங்காது. அத்துடன் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை நகரசபையும், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சாவகச்சேரி நகரசபையும் தவிர மற்றைய ஏனைய பகுதிகள் கிராமோதய சபை அமைப்புக்குள்ளாகும்

ஆகவே 15 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கிராமோதய சபைகள் அமைக்கப்படும்.

இச்சபைகள் அமைப்பதற்கான பணிப்புரைகளை கிராம அபிவிருத்தி கலாசாரப்பகுதி பிரதிச்செயலாளர் திரு மு. சுப்பிரமணியம் 15 உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

இச்சபைகளில் கிராம மட்டத்திலியங்கும் 25 உத்தியோகத்தர்கள் அங்கம் வகிப்பர். இவர்களில் பங்குபற்றலாமே தவிர, வாக்களிக்க உரிமையில்லை.

கிராமசேவை அலுவலர் பிரிவிலுள்ள கட்சி சார்பற்ற 36 தன்னியக்க சங்கங்கள் கிராமோதய சபைக்குச்சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

இக்கிராமோதய சபைகளுக்கு விசேஷ சேவை அதிகாரிகள் செயலாளர்களாகக் கடமையாற்றுவர். [மா]

## பேராசிரியர் ராதா கிருஷ்ணன் யாழ். வருகிறார்



அகில இலங்கை கம்பன் கழகம் நாளை வியாழக்கிழமை தொடக்கம் 28ம் திகதி வரை மாதாந்தக் கம்பன் விழாவை

[6-ம் பக்கம் பார்க்க]

## மற்றுமொருவர் தீக்குளித்தார்!

சென்னை, செப். 22

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதியை விடுதலைசெய்யுமாறு கோரி மற்றுமொருவர் இன்று தீக்குளித்தார்!

45 வயதான இவர், திருவாரூரில் இன்று தீக்குளித்து மரணமானார். கடந்த ஞாயிற்றுக்கிழமை தஞ்சாவூரில் பிருந்தாவனம் என்பவர் தீக்குளித்து மரணமானது தெரிந்ததே.

## 6 பேருக்கு பிடிவிருந்து

[புலோலி]

வல்லைவெளியில் நடைபெற்ற மூவர் கொலைச் சம்பவம் தொடர்பான மரணவிசாரணை நடைபெற்றபோது, பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் 6 பேருக்கு பகிரங்க பிடிவிருந்து பிறப்பித்தார்.

[6-ம் பக்கம் பார்க்க]

## 4 சந்தேகநபர்கள் நீதவான் முன் ஆஜர்

[புலோலி]

வல்லைவெளிச்சம்பவம் தொடர்பாக நான்கு சந்தேக நபர்கள் நேற்றிரவு பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது நான்கு சந்தேகநபர்களையும் இம்மாதம் 29ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் 29ம் திகதி அடையாளஅணிவகுப்புக்குட்படுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுவரும் பருத்தித்துறை, வல்வெட்டித்துறைப் பொலிஸ் கோஷ்டியினர் நேற்றிரவு வே. குணபாலசிங்கம் செ. ஜெகநாதன், வ. பாலசுப்பிரமணியம், சி. தாராசிங்கம் ஆகிய நால்வரையும் பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

பாதுகாப்புக் கருதி, யாழ். சிறைச்சாலை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான், விசேட பாதுகாப்புடன் இவர்களைக் கொண்டு செல்லுமாறும் பணித்துள்ளார். சந்தேக நபர்கள் நேற்றிரவு மூடிய வாகனத்தில் கொண்டுசெல்லப்பட்டனர்.

## திருத்தம்

### பிஸ்கால் விற்பனவு

மாவட்டநீதிமன்றம் பருத்தித்துறை

வழ. இல: 15676.

12-9-81 ந் திகதி இதே பத்திரிகையில் பிரசுரமான 15676 வழ. இலக்க மேற்படி விளம்பரத்தில் வழக்காளியின் பெயர் இன்னப்பு மார்க்கண்டு என்று இருப்பதை இன்னப்பு மார்க்கண்டு என்று திருத்தி வாசிக்கவும்.

க. செல்வராசா,
பிஸ்கால்.

மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.
11-9-81 0906

## உழவு இயந்திரக் கலப்பை விற்பனை

எமது சங்கத்திற்குச் சொந்தமான மேற்படி கலப்பை ஒன்று கேள்விப் பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படும். விரும்புவோர் ரூபா 2/- கேள்விப் பத்திரப் பணமாகவும் ரூபா 50/- வைப்புப் பணமாகவும் கட்டி கேள்வி விண்ணப்பப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம். கலப்பையை பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் அறிவித்தல் கிடைத்த மூன்று நாட்களுக்குள் முழுப் பணத்தையும் கட்டி கலப்பையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

முடிவு திகதி; 28-9-81 பகல் 12 மணி

பொதுமுகாமையாளர்
வேலணை ப. நோ. கூ. சங்கம்,
வேலணை.

0995

## காணவில்லை

ஹேர்குலிஸ் மாஸ்டர் (ஸ்போர்ட்ஸ்) இலப்பு சைக்கிள் சென்ற வியாழன் இரவு 8 மணியளவில் அரசடி கஸ்தூரியார் வீதி சந்தியில் காணாமல் போய்விட்டது. தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். 78, அரசடி வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். தொலைபேசி: 484 1032

## பயிற்சி

வெல்டிங், மோட்டர் மெக்கானிசம், வயறிங் வகுப்புகள் (செய்முறையுடன்) ஆரம்பம்: C. E T. யாழ்ப்பாணம் கல்வி நிலையம். (சாந்தி சினிமாவிற்கு முன்) 22, ராமநாதர் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். 1026

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங், வெல்டிங் மூன்றுமாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம் 4-10-81 அன்னவரும் சேரலாம் நஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம் ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (1020)

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

உறுதியான பெரிய இன் டுக்கல் இரும்புப் பெட்டகம். 12 லாச்சி உள்ளது 5½ அடி உயரம் 2¾ அடி அகலம் நகைக் கடை அடைவு கடைபாவனைக்கு ஏற்றது உடன் பார்வையிடவும். பசுவதி நகைக்கடை, 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 1015

இராச வீதியில் வெலிங்டன் யாழுக்கு எதிரில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு. செ. சின்னராசா, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1016

ஆர்டருக்கு கோவில் மணி (25 ருத் — 1000 ருத் வரை) குத்துவிளக்குகள் [2அடி-5அடி வரை] ஆர்டருக்கு செய்து கொடுக்கப்படும். கோவில்மணிகள் திருத்தியும் கொடுக்கப்படும் தொடர்பு கொள்க: பொன்னையா இரட்ணலிங்கம், இல:3, சந்தானமாதாகோவில் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். 0986

B. M C. 550, Morris LD350 மோட்டர் இரண்டு லொறியிலண்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. விற்பனைக்குண்டு. பார்வையிடவும். மோரிஸ் என்ரபிறைசஸ், நெல்லியடி, கரவெட்டி. 1000

புனரமைக்கப்பட்ட ஹொண்டா CD 125, C 90 செல்வ்ஸ்ராட் மோட்டர்கள் பதிவு செய்யப்படாத மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு நா. சம்பசிவம் அண் கோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0992

E L. தொடரிலக்கம் கொண்ட Vauxhall Wyvern கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் 106, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். 1029

## தேவை

அரிசி, மிளகாய், மாவரைக்கும் மில்களுக்கு 10/H/P மோட்டர்கள் தேவை விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும். லங்கா சேவின் ஸ்டோர்ஸ், மருதனார்மடம், சுன்னாகம். 1025

விற்பனை அலுவலர் விதரணம் யாழ்நகரில் இருபாலருக்கும் அனுபவம் அவசியமில்லை இளைப்பாறியோர் விண்ணப்பிக்கலாம். எழுதுங்கள் 11, சுதுமலைவியகர் வீதி, யாழ்ப்பாணம். 1024

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல புத்தகசாலைக்கு புத்தக வியாபாரத்தில் அனுபவமுள்ள அல்லது புத்தக வியாபாரத்தில் ஆர்வமுள்ள ஆண் பெண் பில் கிளார்க்குகளும், விற்பனையாளர்களும் உடன் தேவை. விண்ணப்பதாரிகள் தமிழ், ஆங்கில அறிவும், நல்லெழுத்தும், 35 வயதுக்குட்பட்டவராயும், யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராயும் இருத்தல் அவசியம். நாம் எதிர்பார்க்கும் சம்பளத்துடன் 25-9-1981ம் திகதிக்கு முன் மனுச்செய்க. விளம்பர இல: 04, பே/ப, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1022

## பஸ்கள் சேவைக்கு விடப்படவில்லை

சென்னை செப். 22

சென்னை நகரில் பல்லவன் போக்குவரத்துக்கழக பஸ் நேற்று சேவைக்கு விடப்படவில்லை.

தமிழ்நாட்டில் இடம்பெற்ற இலஞ்சமுறைச் சம்பவங்களைத் தொடர்ந்தே இப் பஸ்கள் சேவைக்கு விடப்படவில்லை யெனக் கூறப்பட்டது. (ரவ)

## பிஸ்கால் ஏல விற்பனை

சாவகச்சேரி மாவட்டநீதிமன்றம்

இராசையா ஈசுவரதாசன், சுதுமலைட்டாவடி, யாழ்ப்பாணம்.

வழக்காளி.

எதிர்

1. கதிர்காமு சந்திரசேகரம்.
2. பெண் செல்லநாயகி இருவரும் கரவெட்டி மேற்கு, கரவெட்டி, தற்போது இல. 206, புனர்நிர்மாணத் திட்டம், கிளவமடு.

எதிராளிகள்.

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் 798ம், இலக்க வழக்கில் தீர்ப்பின்படி எதிராளிகள் வழக்காளிக்கு இறுக்க வேண்டிய ரூபா 15, 678/-வும், இதற்கு 1980ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10ம் திகதி தொடக்கம் 1980ம் ஆண்டு மார்கழி மாதம் 16ந் திகதி வரையும் 18% வீத வட்டியும், இதன் பின்சேர்ந்துவரும் முழுத்தொகையையும் இறுக்கும்வரை 16-12-80 ந் திகதியிலிருந்து 5% வீத வட்டியையும் கோட்டுச் செலவு ரூபா 821-30 ம் பிஸ்கால் செலவும் அறவிடுவதற்காக பின்குறிக்கும் ஆதனத்தை 1981ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5ந் திகதி (5-11-81) வியாழக்கிழமை காலை 10-30 மணி தொடங்கி என்னால் அவ்வாதனத்தில் நின்று பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் ஜில்லாவில் தென்மராட்சிப்பகுதி, எழுதுமட்டுவாள் கோவிற்பற்று சரம்பகம் இறைபுளிச்சலடியும் மறு பிரிவுகளும் நில. பர. 28 குளி 10, 15/32, இதில் தென்கிழக்குப் பக்கமாக நில பர 13½ இதற்கு கீழ்ப்பக்கமாக நில பரப்பு 6 (ஆறு) இதற்கு எல்லை கிழக்கு இராசரத்தினம் பெண் சி. ஞானசுந்தரம்பிள்ளைக்குரிய ஆதனம், வடக்கு குறித்த இராசேஸ்வரிக்கும் குருகேசு மைப்பெண் தெய்வானைப்பிள்ளைக்குமுரிய ஆதனம். மேற்கு எல்லையில் 1ம் பகுதிகாரில் குறித்த தெய்வானைப்பிள்ளைக்கும் இராசேஸ்வரிக்கும் பிரித்து விட்டதுள் எழுதிய 1ம் துண்டு, தெற்கு குறித்த 1ம் துண்டில் ஒரு பகுதிக்காணியும் ஒழுங்கையும், இவ்வெல்லைக்குள்ளடங்கிய நிலம், பனைகள், தென்னைகள், மாமரங்கள், பலாமரம், வேம்பு அடங்கலும், இன்னும் இதற்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பாவனை உரித்தும்.

பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

18-9-81. 1023





### கிரமக்சோன் முறை இதோ!

- பயிரிடும் முன் வயலில் நீர் வடிய விட்டுக் களைகளை வளரச் செய்யுங்கள்.
- சிவப்பு 'பொலிஜெட்' குழாய் முனை கொண்ட தெளி கருவி மூலம் 1 கலன் நீரில் 1 அவுன்ஸ் கிரமக்சோன் கலந்து தெளியுங்கள்.
- 1 ஏக்கருக்குத் தெளிக்கையில் 4 அவுன்ஸ் தெளி கலவையை மீதம் வையுங்கள்.
- மறுநாள், தவற விட்ட இடங்களில் இதைத் தெளியுங்கள்.
- 3 முழு நாட்கள் கழிந்ததும் களைகள் முற்றுக கும்படி வயலில் நீர் பாய்ச்சுங்கள்.
- 5 நாட்களின் பின் மீண்டும் நீர் வடிய விட்டு உழுங்கள்.
- பரம்படித்து, உலர் பசளை தெளித்த பின் விதையுங்கள்; அல்லது நாற்று நடுங்கள்.

% விளைச்சல் ஏக்கருக்கு 12 புசல் வீதம் அதிகரிக்கும்.

### கிரமக்சோன் முறை தரும் பயன்கள் இதோ!

- ஓர் உழவுச் செலவு மிச்சப்படும்.
- மண் உழுவதற்கு இலேசாக மெதுமைப்படும்.
- பத்து நாளில் பயிரிடும் வேலைகளை முடித்து விடலாம்.
- மற்றக் களைகளுடன் சல்வினியாவும் கட்டுப்படும்.
- மண் மெதுமையும் பசுமையும் அடைவதால் பயிர்கள் மேலும் செழித்து வளரும்.
- அழுகி உக்கும் களைகளும் பயிர்களுக்கு உரப் பசளையாகி விடும்.
- நெல்லோடு புதிதாக வளரும் களைகளும் பெருமளவு கட்டுப்படும்.
- நீர் மிச்சப்படும்; நீர்ப்பாசன நேரமும் குறையும்.

CIC

**கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட் (கொழும்பு)**

ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, த. பெ. எண் 352, கொழும்பு 1. தொலைபேசி: 28421 – 6

கொள்ளளவு:- 450 மில்லி லிற்றர் சில்லறை விலை ரூபா 37/50

### மணிவாக்கு

மனிதனை மகோன்னதமாக்குவது மதம். மனிதனை மேன்மைப்படுத்துவது கல்வி. மனிதனை உயர்வடைய வைப்பது கொள்கைகள்.

சுவாமி விவேகானந்தர்

# “தமிழினமேம்பாட்டிற்கு சாதி ஒரு சாபக்கேடு!”

## சட்டக்கல்லூரி தமிழ்மன்ற பரிசளிப்பு விழாவில் யோகேஸ்

(கொழும்பு)

“சாதிக்கொடுமைக்குச் சாவு மணி அடிக்கவேண்டியது அவசரமும் அவசியமுமாகும். தமிழினத்தின் மேம்பாட்டிற்குச் சாபக்கேடாக இருப்பது சாதிப் பிரச்னைதான்.”

இவ்வாறு யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், இலங்கை சட்டக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் மன்றக் கலைவிழா பரிசளிப்பு வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

“சட்டத்துக்கும் அரசியலுக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு உண்டு. சட்டத்துறைக்குத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர்கள் அரசியல் வளையையும் எட்டிப்பார்க்காமல் இருக்க முடியாது.

“சிங்கள மக்கள் எமது விரோதிகள் அல்ல. அவர்களுக்கு எதிராக எம்மிடம் எவ்வித குரோதமோ விரோதமோ கிடையாது. அவர்கள் ஆதரவுடன் எமது இலட்சியத்தை அடைவதே எமது நோக்கம்.

“சமீபத்திய வன்செயல்களால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் மலையகத் தமிழர்களே. பாதுகாப்பற்ற பயங்கர சூழ்நிலையில் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத் துடித்தவர்கள் அவர்கள்.

“மலையக மக்கள், தமிழ்த் தேசிய இனத்தின் அங்கம். அவர்கள் எங்கு இருந்தாலும் எமது மக்கள் அவர்களைப் பிரித்துவிட எவரும் முற்படக் கூடாது.”

# நமது நோக்கு

## சமூகச் சீரமைப்பு

“எமது இனத்திற்கு இன்றுள்ள ஒரே பலம் ஒற்றுமையாகும். இந்த ஒற்றுமையை சிதறவிடாது கட்டிக்காத்துவர வேண்டும்” என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அண்மையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

“நடப்பதெல்லாம் நன்மைக்கே” என்று நாம் பல்லவி பாட பாட்டு முடுக்குகிறது.

‘இனம்’ என்ற சொல்லை மாற்றி இயக்கம் என்று சொன்னால் தமிழ் மக்களின் விடுதலை இயக்கம் என்ற விலாசம் அழகுகொள்கின்றது.

நாமெப்போதும் இந்நாட்டு மக்களை, தேசிய ஒருமைப்பாட்டின் அடிப்படையில் கணித்து வந்தோம். அந்த ஒருமைப்பாட்டைத் தமிழ் மக்களைப்பொறுத்தளவில் இருமையில் ஒருமை என்றே கருதி வந்தோம்.

இன்றைய காலகட்டத்தில் இருமையைக் காண முடியவில்லை. ஒருமை எவ்வாறு ஏற்படும்? தேசியப் பண்பாடு பேசும்போதெல்லாம் இன உரிமைகள், இனப்போராட்டம் என்று குறிப்பிடுவது இன்றைய அரசியல் அகராதிக்குப் பொருத்தமற்ற பதங்கள் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

எமது நாட்டின் சமுதாயத்தில் தமிழ் மக்கள் ஒரு முக்கிய இடம் வகித்து வந்திருக்கிறார்கள். நாட்டின் தேசிய வாழ்வுக்குப் பல பாரிய பணிகளை ஆற்றியிருக்கின்றனர். உலகப்புகழ் பெற்ற சாதனைகளைப் பல துறைகளில் இன்றும் ஆற்றி வருகின்றனர்.

இவர்களுக்கு நேர்ந்த அதோகதிதான் இன்று ஒரு ஒற்றுமைப்பட்ட இயக்கத்தை உருவாக்கியுள்ளது.

அரசியல் கட்சிகளில் அரும்பி, முளைத்த இயக்கம், கட்சிப் பாகுபாடுகளின்றி வளர்ச்சிபெற்று, நோக்கத்தை நிறைவேற்றவேண்டும் என்பதே ஒவ்வொரு தமிழனின் பிரார்த்தனையாகும்.

எமது சமுதாய தனித்துவத்தைப் பேண வழி வகுக்கப்பட்டால், அரசியல்கட்சி வேறுபாடுகள் இயற்கையாகவே தோன்றி ஜனநாயக கோட்பாடுகளுக்கமைய தொழிற்பட நியாயமுண்டு.

இன்றைய இயக்கத்தில் ஒற்றுமை காணப்படுவது அபூர்வமான செய்தி! நல்லறிவின் விளைவு. நல்லறிவைப் புகட்டிய ஆசான் துன்பம். எனவே இன்றைய ஒற்றுமை நிலையைக் கைவிடுதல் அபாயம்.

தனிப்பட்ட முறையில் இரு தமிழர்கள் - குறிப்பாகப் படித்தவர்கள் - ஒற்றுமைப்பட்டார்கள் என்றால், அது தவறான செய்தியென்று மற்றைநாள் பத்திரிகையில் பிரபலமாகப் பிழை திருத்தப்படும்.

இப் பண்பு எமது பிறப்புரிமை. பெரிய ஞானிகள், அருளாளர்கள், ஜீவன்முத்தர்கள் அனுபவத்தில் கண்டறிந்த உண்மை இது. கல்லாத பாமர மக்கள் எவ்வளவோ நல்லவர்கள் என்பதை உணர்ந்தவர் தாயுமான சுவாமிகள்.

கல்வியறிவில் தேர்ச்சி பெற்றவர்களே தாம் கற்றதற்கும் நடப்பதற்கும் சிறிதும் சம்பந்தமில்லாமல் பல வகைகளில் உலகை ஏமாற்றி உழலுகின்றார்கள். இரு வித்துவான்கள், பேராசிரியர்கள் கருத்துப்பரிமாறும்போது நேரில் கண்டு சுவைக்கும் அனுபவம் இது.

தமிழின் முக்கியத்துவத்தை ஒருவர் பேசத் தொடங்கினால், ஆங்கிலத்தின் அவசியத்தை மற்றவர் தர்க்கித்து அவரை மடக்கி விடுவார்.

தலைவர்களிடையே காணப்பட்ட பொய், பொறாமை, வஞ்சகம், சூழ்ச்சி, போலிப்புலமை இவ்வித இயக்கத்தைப் பெரிதும் பாதித்துத் தலையெடுக்காமற்பண்ணி வந்திருக்கிறது.

அண்மையில் வெளிவந்த ‘தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தின் நாளேடு’ என்ற நூல் மேற்கூறப்பட்ட உண்மைகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

இந்தப் பின்னணியில் தமிழ் மக்களுக்கு நிகழ்ந்த பேரிழப்பு- அதற்கு மேலாக சொற்பதங் கடந்த நிலையில் ஏற்பட்ட அவமானம் மக்களை ஒன்றுபடுத்தவல்லது; ஒன்றுபடுத்தி வருகிறது.

ஆனால் தமிழ் மக்களின் விடுதலை இயக்கம், உட்பகைக்கு புறம்பானதா?

நாங்கள் ஒதுக்கப்பட்ட சமூகமென்று மனம் நொந்தால் எங்கள் மத்தியில் எங்களால் ஒதுக்கப்பட்டு, நலிவுற்றிருக்கும் மக்கள் உண்டா? ஆம். இயக்கம் இன்னும் வலுப்பெற்று மக்கள் இயக்கமாக வளர்ச்சியடையாததற்கு அதுவே முக்கிய காரணம்.

இவ்விடயம் பற்றி யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை திட்டங்களைச் செம்மையாகச் செயற்படுத்தும் வாய்ப்பு உண்டு. யாழ்ப்பாணம் மட்டுமல்ல வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்ட சபைகள் ஒருங்கிணைந்து துரிதமான நடவடிக்கைகள் எடுக்கலாம்.

யாழ்ப்பாணத்தின் அவசியம் முதன்மையானது. பின்தங்கியமக்கள் என்று ஒரு வர்க்கம் இருப்பது சமுதாயம் முழுவதையும் சீர்குலைத்துவிடும். பிற்பட்ட மக்களின் வாழ்க்கைநிலை மேம்பட்டால்தான் சமுதாயம் உண்மையான முன்னேற்றம், ஒற்றுமை கண்டதாகும்.

இந்தியாவில் மகாத்மா காந்தி ஆற்றியபணி உலக சரித்திரத்தில் பொன்எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. ஆனால் சாதியென்ற அற்புத படைப்பு நாடெங்கிலும் காணப்படும் பண்டமல்ல.

வறுமை, அறியாமை, கல்வியின்மை, அரசாங்க உத்தியோகங்களில் வாய்ப்புக் கொடுக்காமை ஓரளவிற்கு குறைந்ததேனும்; மேல்தட்டில் உள்ள வசதியுள்ளவர்கள் இவர்களை ஏளனம்பண்ணும் நிலை இன்றும் இருந்து வருகிறது.

சமுதாய ஸ்தாபனங்களில் கோவில் குடிதண்ணீர் உட்பட - சரிநிகர் சமானமான நிலை இவர்களுக்கு இன்னும் முயற்கொம்பாகவே இருந்து வருகிறது. அரசியல் வாதிகள் இவர்களைப் பகடைக்காய்போல பாவித்தது பலர் அறிந்த உண்மை. உழைத்து உழைத்து உருக்குலைந்து ஊதியமின்றி வாடுவோரும், படித்து முன்னேறிவருபவர்களும் ஒதுக்கப்பட்டவர்கள் என்ற உணர்ச்சியில் வாழ்வதும் பலம் பெற்ற சமுதாயத்தின் பலவீனப்பொருத்துக்கள்.

இவற்றில் உடனடி கவனம் செலுத்துவோமாக.

# மக்கள் கருத்து

## திருநெல்வேலிப்பகுதி மாணவர் கஷ்டம்

திருநெல்வேலிப்பகுதிப் பாடசாலை மாணவ மாணவிகள் படும் அவஸ்தையை போக்குவரத்துச்சபை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

யாழ். நகரிலுள்ள பல பாடசாலைகளிலே பயிலும் மாணவ, மாணவிகள் திருநெல்வேலிச் சந்தியில் பஸ்ஸிற்காக பலமணி நேரம் காலையில் காத்துநிற்க வேண்டியிருக்கின்றது. மாணவர்களுக்கு ஒரு பஸ்ஸும், மாணவிகளுக்கு ஒரு பஸ்ஸுமாக இருபாடசாலை பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருக்கின்ற போதிலும் மாணவிகளுக்கான பஸ் திருநெல்வேலிச் சந்திக்குவரும்போது நிரம்பி வழிந்த வண்ணமே காணப்படுகின்றது. இதனால் திருநெல்வேலி, சந்தர்மடம் போன்ற இடங்களைச்சேர்ந்த மாணவிகளுக்கு இந்த பஸ்ஸில் இடம் இல்லாது போய்விடுகின்றது. வேறு வழியின்றி, இவர்களிற் பலர் தனியார் வாகனங்களில் பிரயாணம் செய்யவேண்டி நேரிடுகின்றது. இதனால் அவர்கள் பல தொல்லைகளை அனுபவிக்க வேண்டியிருப்பதோடு, வகுப்புக்களுக்கும் பிந்துகின்றனர்.

நக்கா வீதியிலுள்ள சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் பயிலும்குழந்தைகள் ஆரியகுளம் சந்தியிலிருந்து நீண்டதூரம் நடக்கவேண்டியுள்ளது. இதுஎன்னகொடுமை!

எனவே மாணவிகளுக்காக மேலதிக பஸ் ஒன்றைச்சேவையில் ஈடுபடுத்த வேண்டுமென்றும் நக்கா வீதியினூடாக பாடசாலை பஸ் ஒன்று செல்ல வேண்டுமென்றும் குழந்தைகளைக் கூட்டிவரும் உறவினர் பாடசாலை பஸ்ஸில் செல்ல அனுமதிக்கப்படுவதோடு அவர்களுக்குச் சலுகைக் கட்டணத்தில பிரயாணச்சீட்டு வழங்க வேண்டுமென்றும் போக்குவரத்துச் சபையினரை இப்பகுதிமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். அதிகாரிகள் ஆவன செய்வார்களா?

கே. தங்கராசா
(ஓய்வு பெற்ற சிறைச்சாலை அதிகாரி)
கொக்குவில்.

## இன்று ஆரம்பம் கோப்பாயில் பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

தையல், மனையியல், சித்திரம், கைப்பணிப் பொருட்காட்சி ஒன்று கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் இன்று 23ம் திகதி முதல் 25ம் திகதிவரை நடைபெறவிருக்கிறது.

## லூசன் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

நவீன சீன இலக்கியத்தின் முன்னோடியான லூசன் நூற்றாண்டு விழா யாழ். ட்ரிம்மர் மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் நடைபெறும்.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஆதரவில் நடைபெறும் இவ்விழாவுக்கு திரு. க. நடனசபாபதி தலைமைவகிப்பார். பேராசிரியர் க. கைலாசபதி, திருவாளர்கள் எம். ஏ. நுஃமான், எம். சின்னத்தம்பி, கே. செந்திவேல் ஆகியோர் சிறப்புரை ஆற்றுவார்கள். கூட்ட முடிவில் லூசனின் ‘வழிப்போக்கன்’ நாடகமும் நடைபெறும்.




சக்தி செறிந்த ஃபைசர் பிறிமிக்ஸ் ‘ஏ’ கலவைகள்

- வளர்ப்புக் கோழிகளுக்கு ப்றீடர் பிறிமிக்ஸ் ‘ஏ’
- இறைச்சிக் கோழிகளுக்கு ப்றெயிலர் பிறிமிக்ஸ் ‘ஏ’
- முட்டைக் கோழிகளுக்கு லேயர் பிறிமிக்ஸ் ‘ஏ’

500 கிராம் பக்கெட் விலை ரூ. 28/- முதல் ரூ. 42/- வரை.

புதிதாகத் தயாரித்த கலவைகள் என்பதால் சத்துக் குறையாமல் உடன் தயாரிப்பின் உத்தரவாதமான பயன் உங்கள் கோழிகளுக்குக் கிடைக்கும் கிட்டிய கோழித் தீன் வியாபாரியிடம் கேட்டு வாங்குங்கள்.

விசாரணைகள்
Pfizer ஃபைசர் லிமிட்டெட்
688, காலி வீதி, ரத்மலானை.
277, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.

## வல்லைவெளி மூவர் மரணவிசாரணை

# "கைவிலங்குகளைத் திறந்துவிட்டதும் கைதிகள் இறங்கி ஓடினார்கள்"

### யாழ். சிறைக்காவலர் சாட்சியம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட பருத்தித் துறை இ. போ. ச. பஸ் வண்டியின் சுற்றி இந்த ஆறு விளக்கமறியல் கைதிகளில் அப்புத்துரை, நிலீ நடராஜாவும் பஸ்ஸில் வலது பக்கத்திலும் பசேந்திரன், துரைராஜா, தேவராஜா, தமிழ்ராஜா ஆகிய நால்வரும் பஸ்ஸின் இடது பக்கத்திலும் இருந்து வந்தார்கள். இந்த ஆறு கைதிகளும் பஸ்ஸின் நடுப்பக்கத்தில் கைவிலங்கு போட்ட வண்ணமே இருந்தார்கள்.

சுமார் 8-10 மணியளவில் யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்ட அந்த பஸ் வண்டியில் சாதாரணமாக பிரயாணிகள் இருந்து வந்தார்கள். அப்படிப் பிரயாணம் செய்த போது அப்புத்துரையும் நிலீ நடராஜாவும் இருந்த ஆசனத்திற்குப் பின்னால் எனது உதவியாளர் இராஜரட்ணமும் மற்ற நால்வரும் இருந்த ஆசனத்திற்குப் பின்னால் நானும் இருந்து வந்தோம்.

பஸ் வண்டி பருத்தித்துறை நோக்கி வந்த போது [illegible]பல இடங்களில் பிரயாணிகள் ஏறியும் இறங்கினார்கள்.

இந்த பஸ் வண்டி அச்சுவேலி பஸ் நிலையத்தில் வந்து நின்றதும் அங்கேயும் பிரயாணிகள் ஏறியும் இறங்கினார்கள். எனக்குத் தெரிந்தவரையில் அச்சுவேலி பஸ் நிலையத்தில் பஸ் வண்டி நின்றபோதும் பஸ் வண்டியின் இடது பக்கத்தில் இருந்த விளக்க மறியல் கைதிகளுடன் பஸ் வண்டிக்கு வெளியில் நின்று யாரும் கதைப்பதை நான் காணவில்லை.

#### கைதிகளுடன் கதைத்தார்

பஸ் வண்டியின் வலது பக்கத்திலிருந்தோ இடது பக்கத்திலிருந்தோ கைதிகளுக்கு சிகரெட் கொடுக்கப்பட்டதையும் நான் கவனிக்கவில்லை. ஆனால் விளக்க மறியல் கைதிகள் பஸ்ஸினுள் இருக்கும் போது அச்சுவேலி பஸ் நிலையத்தில் ஒரு நபர் பஸ்ஸிற்குள் ஏறி பஸ்ஸின் இடப்பக்கத்திலிருந்த விளக்க மறியல் கைதிகளுடன் கதைத்ததை நான் கண்டேன். அந்த நபரை எனக்கு யார் என்று தெரியாது.

அப்படிக் கதைத்த அந்த நபர் அதே பஸ் வண்டியில் அச்சுவேலியிருந்து தொடர்ந்து பிரயாணம் செய்தார். அந்த நேரத்திலும் இந்த விளக்க மறியல் கைதிகளின் கைகளில் விலங்குகள் போடப்பட்டிருந்தன.

பஸ் வண்டி அச்சுவேலியிலிருந்து புறப்பட்டு பருத்தித் துறையை நோக்கி பல இடங்களில் நின்று நின்று வந்து கடைசியாக சம்பவம் நடந்த இடத்தில் வந்து நின்றபோது என்ன காரணத்திற்காக அப் பஸ் வண்டி நின்றது என்று என்னால் கூறமுடியாது.

#### எதிரிகள் வாருங்கள்

அப்படி பஸ் நின்ற சொற்ப நேரத்திற்குள் பஸ்ஸில் வந்த கைதிகள் "பஸ்ஸை எடு, பஸ்ஸை எடு" என்றும் எங்கள் எதிரிகள் எங்களைக் கொல்ல வருகிறார்கள் என்று அவலக் குரலில் சத்தமிட்டார்கள்.

பஸ் நின்ற வேளையில் காணிருந்த இடது கைப்பக்கமாக

(5ம் பக்கம் பார்க்க)


# புத்தம் புதிய பாலின் அத்தனை சிறப்பும்...




பெயார் பிராண்ட், குடும்பத் தேவைகளுக்குகந்த மிகச் சிறந்த முழு ஆடை கொண்ட பால் மா. உங்கள் குழந்தைகள் செழிப்புடன் வளர பெயார் பிராண்ட் பால் மா.

உலகின் உயர்ந்த பால்பண்ணைகளில் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டு, மிகக் கடுமையான தரக்கட்டுப்பாட்டின் கீழ், புத்தம் புதிதாக இருக்கும் வண்ணம் உலோகத்தாளில் அடைக்கப்பட்டுள்ளது. உங்கள் பணத்திற்கு அதிசிறந்த பெறுமதி பெயார் பிராண்ட்.

சுகத்தையும் அதேவேளை செலவுபற்றியும் சிந்திக்கும் குடும்பங்களுக்கு மிகப் பொருத்தமானது.

தேநீர், காப்பி அல்லது ஐஸ்கிறீம், இனிப்பு வகை தயாரிக்க முழு ஆடை கொண்ட பெயார் பிராண்ட் பால் மாவைப் பாவியுங்கள். விரும்பினால் தேங்காய்ப் பாலுக்குப் பதிலாக இதனை சமையலுக்கும் பயன்படுத்தலாம்.

# பெயார் பிராண்ட்

பெயார் பிராண்ட் முழு ஆடைப் பால்மா

உங்கள் பணத்திற்கு அதி சிறந்த பெறுமதி.

Grant. K & E 3954

**வெலிங்டன்** (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30
லொறி
**தர்மராஜா**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
லொறி-ஸ்ரீதேவி
**பட்டாக்கத்தி பைரவன்**

**வெலிங்டன்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-லட்சுமி
**அவன்-அவள் அது** (ஈஸ்ட்மன் கலர்)

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
**அலாவுதீனும் அற்புதவிளக்கும்**

**சாந்தி** (யாழ் நகர்) 10-30, 2-30, 6-15 & 9-45
கமல்... ஸ்ரீதேவி...
**குரு**
நம்பியார் சுந்தரராஜன்
தென்னகத்தில் மிகுந்த பரபரப்பூட்டிய வண்ண ஓவியம்

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-15, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
**ஆலயமணி**

சகலரது எம். ஜி. ஆர். காமினியின் அற்புத நடிப்பைக் காண இன்னும் சில தினங்கள் மட்டும்.
**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள்
காமினி, ஸ்ரீபிரியா, ராதாசலுஜா
**நீலக்கடலின் ஓரத்திலே**
(ஈஸ்ட்மன் கலர்)
From 25 Sept. 81 SEAN CONNERY in
**Wind and the Lion**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ஜெமினி, முத்துராமன், எம். ஆர். ராதா
கே. ஆர். விஜயா, சாவித்திரி, மனோரமா
நடித்த
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி
**கற்பகம்**

**ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர், பாக்யராஜ், சுமதி
மற்றும் பலர் நடித்த
**சுவர் இல்லாத சித்திரங்கள்**

5 வது வாரம்
**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 10-30, 2 30, 6-15, 9-30
மஞ்சுபார்கவி ... துளசிராம்
**சங்கராபரணம்** (கலர்)

**REGAL** நில்
Daily 5 Shows
**"ஜங்கிள் புக்"**
காட்சி நேரம்: 10-30, 2-15, 4-45, 7-00, 9-30

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
**MADMAX**


# 'கைவிலங்குகளைத் திறந்து....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றைகள் இருந்த பக்கமாக ஏறத்தாழ பதினைந்து ஆட்கள் துவக்குகள், வாள்கள், கோடரிகள் போன்ற ஆயுதங்களுடன் நிற்பாட்டப்பட்ட பஸ் வண்டியை நோக்கி ஓடி வருவதைக் கண்டேன்.

இதேசமயம் பஸ்ஸை எடுக்க வேண்டாம் என்று பஸ் சாரதியை ஒருவர் துவக்குடன் வெருட்டினார். இதைத் தொடர்ந்து வெடிச் சத்தம் கேட்டது.

**முன்பக்கம் வந்தேன்**

நான் உடனே என்னிடமிருந்த கைவிலங்குத் திறப்பை எனது உதவியாளர் இராஜரட்ணத்திடம் கொடுத்துவிட்டு பஸ் வண்டியின் முன் பக்கத்தில் இருக்கும் மிதிபலகைக்கு வந்தபோது ஒருவர் துவக்குடன் பஸ்ஸிற்குள் ஏறுவதற்கு எத்தனித்தார். நான் அந்த நபரை பஸ்ஸிற்குள் ஏறவேண்டாம் என்று எச்சரித்து பஸ்ஸிற்குள் ஏறுவதைத் தடுத்தேன். அப்போது அந்தநபர் கெட்ட வார்த்தைகளால் பேசி நான் அவருக்கு விலத்தி வழிவிடாவிடில் என்னைச் சுட்டுவிடுவதாகவும் பயமுறுத்தி எனக்கு நேரே துவக்கை நீட்டினார். நான் உடனும் பஸ்ஸிற்குள் போய் என்னிடம் இருந்த மற்றத் திறப்பால் மற்ற விளக்கமறியல் கைதிகளைத் திறந்து விட்டேன்.

**கைவிலங்குகளை திறந்தேன்**

அந்த நேரத்தில் அவர்களுடைய கைகளில் இருந்த விலங்குகளைத் திறந்துவிட்டதன் காரணம் அப்படிச் செய்யாதுவிடின் அந்த இடத்தில் அறுவரும் கொலை செய்யப்படுவார்கள் என்று எண்ணியதன் காரணமாகவே.

கைதிகளின் விலங்குகளைக் கழற்றிவிட்டவுடன் மற்ற சகபிரயாணிகளுடன் இந்தக் கைதிகள் அறுவரும் பஸ்ஸை விட்டு இறங்கி ஓடினார்கள். நானும் பஸ்ஸைவிட்டு இறங்கினேன்.

**அழகேஸ்வரனை கண்டேன்**

நான் பஸ்ஸைவிட்டு இறங்கினதும் பக்கத்தில் இருந்த பற்றைக்குள் இருந்து ஓடிவந்த பத்துப் பதினைந்துபேரில் ஒருவரை என்னால் அடையாளம் காணக்கூடியதாக இருந்தது அவரது பெயர் நாராயணசாமி அழகேஸ்வரன் அவரது கையில் கைக்கோடரி இருந்தது. இந்த நபர் கம்பர்மலையில் ஏற்கனவே நடந்த ஒரு கொலை வழக்கில் கைதியாக விளக்கமறியலில் எங்கள் பாதுகாப்பில் இருந்திருக்கிறார்.

**எனக்கு அடி விழுந்தது**

நான் அழகேஸ்வரனைப்பார்த்து 'ஏன் உப்படி இந்த வேலைகளெல்லாம் செய்கிறாய்'' என்று கேட்டேன். அந்தநேரத்தில் எனக்கு பின்னால் இருந்த ஒருவர் என்னை அடித்து 'நீயும் இவர்களோடை சேர்ந்து இப்படி ஓடடா என்று கூறினார். எனக்கு அடி விழுந்தபோதிலும் காயங்கள் ஒன்றும் ஏற்படவில்லை எனக்கு அடித்தவரையும், என்னை நோக்கி துவக்கை நீட்டியவரையும் காட்டினால் என்னால் அடையாளம் காட்ட முடியும்

அந்தப் பற்றைக்குள் இருந்து ஓடிவந்தவர்கள் இரண்டு மூன்று துவக்குகளும், நாலு ஐந்து வாள்களும் கோடரிகளும் வைத்திருப்பதைக் கண்டேன்.

நான் பஸ்ஸிற்குப் பின்பக்கமாக வந்து ரோட்டுக்கு தென்புறமாகவுள்ள தென்னந் தோட்டத்தில் நின்றேன் அந்த நேரத்தில் எனது உதவியாளர் இராஜரட்ணத்திற்கு என்ன நடந்தது என்பது பற்றித் தெரியாது

அழகேஸ்வரன் பஸ் நின்ற இடத்திலிருந்து இடப்பக்கமாக வயல் வெளியில் யாரையோ துரத்திக்கொண்டு ஓடுவதைக் கண்டேன். அந்த நேரத்தில் பஸ் பிரயாணிகளும் இந்தக் கைதிகளும் ஒன்றாக ஓடிபபடியால் அழகேஸ்வரன் யாரைத் துரத்திக்கொண்டு ஓடினார் என்பது தெரியாது

அழகேஸ்வரன் ஓடும்போது அப்புத்துரை இந்தா ஓடுகிறான் என்று சொல்லிக்கொண்டே ஓடினார்.

**மகேந்திரன் வந்தார்**

பத்து பதினைந்து நிமிடங்கள் நான் அந்த தென்னந்தோட்டத்தில் நின்றபோது கிழக்குப் பக்க சடலைப் பக்கத்தால் விளக்கமறியல் கைதி மகேந்திரன் எனது திசையை நோக்கி வந்தார். நான் உடனே மகேந்திரனை பாரமெடுத்து அப்போது பருத்தித்துறை நோக்கி வந்த பஸ்வண்டியில் ஏறி பருத்தித்துறைச் சிறைச்சாலையில் அவரைப்பாரம் கொடுத்தேன்.

**பொலிஸுக்கு சென்றேன்**

பின்பு பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு இவ்விடயம் பற்றி முறைப்பாடு செய்யப்போனபோது அவரும் இது சம்பந்தமாக அறிவித்தல் கிடைத்து அந்த இடத்திற்குப்போக ஆயத்தமாக நின்றார். நானும் அவருடன் சேர்ந்து சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றேன். நாங்கள் கொண்டு வந்த ஆறு விளக்கமறியல் கைதிகளில் துரைராசா, அப்புத்துரை, தேவராசா ஆகிய மூவரும் இறந்தநிலையில் கொலைசெய்யப்பட்டு கிடப்பதை நான் அவதானித்தேன்.

**இரத்த வெள்ளத்தில்**

துரைராசா பஸ் வண்டிக்கு வலப்பக்கமாக ரோட்டிற்குத் தெற்குப் பக்கமாகவுள்ள வயலுக்குள் இரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்தார். பஸ்ஸின் இடப்பக்கமாக ரோட்டுக்கு வடக்குப்புறமாக உள்ள வயலில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் அப்புத்துரை கொலைப்பட்டுக் கிடந்தார். அப்புத்துரையின் உடல்கிடந்த இடத்தில் இருந்து ஏறத்தாழ எழுபது அடி தூரத்தில் அப்புத்துரையின் தலை கிடந்ததைக் கண்டேன். அப்புத்துரையின் உடலத்திற்குப் பக்கத்தில் ஒரு கைக் கோடாலியும் கிடக்கக் கண்டேன். தேவராசாவின் சடலம் அப்புத்துரையின் சடலம் கிடந்த இடத்திற்கு மேற்குப் புறமாக சற்றுத் தொலைவில் கிடந்தது.

தில்லை நடராசாவிற்கு என்ன நடந்தது என்று அந்த நேரம் கவனிக்கவில்லை தம்பிராசாவிற்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது

பின்பு நாங்கள் கொண்டு வந்தவர்களில் எஸ். தில்லை நடராசா என்பவர் காயத்துடன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அறிந்தோம்.

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 7-ம் திகதி
புதன்கிழமை
(23 - 9 - 81)

**மேடம்:** வாகனச்சாரதிகளுக்கு இன்று சிறப்பான தினம் வரவிலும் திருப்தி காணப்படுகின்றது. தாய்வழிமூலம் சிலருக்கு தனலாபம் கிடைக்கும் அறிஞர்களின் தொடர்புகளுக்கும் இடமேற்படும்.

**இடபம்:** உறவினர்களின் வருகை உங்களுக்கு உவகையைத்தரும் சுற்றுவட்டாரத்திலும் மதிப்பு உயரும் குடும்பத்தில் கணவன் மனைவி உறவு மிகவும் சுமுகமாக இருக்கும் பாராட்சமூட்டும் நாள்.

**மிதுனம்:** முக்கியமான விடயங்களை இன்று பின்போடுவது விரும்பத்தக்கது. உள்வீட்டிலேயே உணவுவேலை நடைபெறலாம் பகைவர்களின் நடவடிக்கை இறுதிவரை பரமரகசியமாகவே இருக்கும்

**கடகம்:** வாழ்வுப்பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும். இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள். குடும்பத்தில் சுமுகமான சம்பவம் இடம்பெறும்.

**சிங்கம்:** நம்பிக்கைமோசடி மூலம் நலிவுகள் தென்படும். நண்பர்களின் தொல்லைகள் அதிகரிக்கும். தொழில் புரியுமிடத்தில் மேலதிகாரியின் கண்டிப்புக்கு இலக்காகலாம். நிதானம் வேண்டும்.

**கன்னி:** தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும் தெய்வ நம்பிக்கை மேலிடும். ஸ்தலயாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படலாம். நினைத்ததைச் சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

**துலாம்:** பணப் தாராளமாகக்கிடைக்கும், சிலருக்கு அதிஸ்டதேவதையின் அணைப்பும் உண்டு. கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரியின் நம்பிக்கையைப் பெறுவீர்கள், சந்தோசமான தினம்,

**விருச்சிகம்:** பொருளாதார நிலை சீரடையும் இல்வாழ்க்கையில் எதிர்பாராத பொருள்வரவுக்கும் இடமுண்டு பத்திரிகையாளரின் வேதனம் உயர்த்தப்படலாம், வெளியூரிலிருந்து செய்தி கிடைக்கும்.

**தனு:** எதிர்பாராத செலவினங்களினால் பாதிக்கப்படுவீர்கள், கடன்படவும் நேரிடலாம், சமீபத்தில் நடைபெற்றவரும் சம்பவமொன்று மனதுக்கு வேதனையைத் தரலாம், தொழில் தொல்லை உண்டு.

**மகரம்:** தம்பத்தில் ரேகைகள் படரும், எதற்கெடுத்தாலும் சீறி விழுவீர்கள், கொடுக்கல் வாங்கல் மூலம் ஏமாற்றமடைய நேரிடும், தொழில்துறையில் தொல்லைகள் தோன்றிமறையும்.

**கும்பம்:** பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. கொடுக்கல்வாங்கல் மூலம் அதிக ஆதாயத்திற்கு இடமுண்டு. உசிதமாக [illegible] காரணமாக எதிரிகள் உங்களை வரப்படுத்துவார்கள். குடும்பத்திலும் மகிழ்ச்சி உண்டு.

**மீனம்:** இதயத்தில் எரிமலை குமுறும் உள்வீட்டிலேயே உபத்திரவங்கள் அதிகரிக்கும். குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். ஆணவப் பேச்சினால் மற்றவர்களுடைய வெறுப்பைச் சம்பாதிக்கலாம்.

சோதிட கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வி

புதுடில்லி, செப்: 22

ஹரியானா மாநில முதலமைச்சர் திரு. பஜன்லால் மீது எதிரக் கட்சிசபையில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்று தோல்வியடைந்தது.

இப்பிரேரணைக்கு எதிராக 50 பேரும், ஆதரவாக 37 பேரும் வாக்களித்தனர். (ரொ)

## கேள்வி அறிவித்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இரசாயன நுண்கலைப் பிரிவின் (மருத்துவம்) சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்காக இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 1981-10-07 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தலைச்சேவைகள் கிளையிலிருந்து மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக 100/- ரூபாவும் மீளளிக்கப்படாத கட்டணமாக 25/- ரூபாவும் செலுத்திப் பெறக்கூடிய குறித்த படிவங்களில் கேள்விகள் அனுப்பப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை இக்காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1981-09-21. 1035

வல்லைவெளி மூவர் மரணவிசாரணை:

# "அழகேஸ்வரனை அடையாளம் காணக்கூடியதாக இருந்தது

## கம்பர்மலை கொலை வழக்கில் இவர் விளக்கமறியலில் இருந்தவர்"

### யாழ். சிறைக்காவலர் சாட்சியம்

(நமது நிருபர்கள் திருச்செல்வம், சுபேந்திரன்)

[புலோலி]

"பஸ் நின்றதும் பக்கத்திலிருந்த பற்றைக்குள் இருந்து ஓடிவந்த பத்துப் பதினைந்துபேரில் ஒருவரை என்னால் அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. அவரது பெயர் நாராயணசாமி அழகேஸ்வரன். அவரது கையில் கைக்கோடாரி இருந்தது. இவர் கம்பர்மலை முதலாவது கொலை வழக்கில் கைதியாக விளக்கமறியலில் எங்கள் பாதுகாப்பில் இருந்தவர்.

வல்லைவெளி மூவர் மரண விசாரணையில் யாழ். சிறைச்சாலை காவலாளர் சோமசுந்தரம் சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது. யாழ். சிறைச்சாலைக் காவலாளர் சோ. சுப்பிரமணியம் மேலும் கூறியதாவது:

"1980ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் பருத்தித்துறைச் சிறைச்சாலையில் கடமையாற்றுகின்றேன். விளக்கமறியலில் கைதிகளை சில சந்தர்ப்பங்களில் பருத்தித்துறை மறியற்சாலை உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கூட்டிக் கொண்டு வருவார்கள். சிலவேளைகளில் யாழ். மறியல்சாலை உத்தியோகத்தர்கள் பருத்தித்துறைக்குக் கொண்டு வருவார்கள். இந்த ஏற்பாடு பருத்தித்துறை நீதிமன்றத்தின் உத்தரவுப்படியே நடைபெறும்.

"ஒரு விளக்கவறியல் கைதியை விளக்கமறியலில் வைக்கும் போது அந்தக்கைதி இந்த நீதிமன்றத்தில் குறிப்பிட்ட திகதியில் ஆஜர் செய்யப்படும்வரை விளக்கமறியலில் வைக்கப்படுவார். அவ்வுத்தரவிற்கமைய அந்த விளக்கமறியற் கைதி குறிப்பிட்ட திகதிக்கு இங்கே கொண்டு வரப்படுவார்.

**சிறைச்சாலை சென்றோம்**

"இம் மாதம் 18ம் திகதி காலை 4. 35 மணியளவில் நானும் எனது சகஊழியர் இராஜரட்ணத்துடன் அன்றைய தினம் மன்றிற்குக் கொண்டுவரப்படவேண்டிய விளக்க மறியல் கைதிகளைக் கொண்டு வருவதற்காக யாழ். சிறைச்சாலைக்குச் சென்றோம். இந்தச் சிறைக் கைதிகள் கடந்த மாதம் கம்பர் மலையில், நடந்த ஆறு கொலைகளில் சம்பந்தப்பட்டவர்களென விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

"யாழ். மறியற்சாலையில் நானும் எனது சக ஊழியர் இராஜரட்ணமும் இந்த வழக்கின் ஆறு விளக்க மறியல் கைதிகளை காலை 7-15 மணியளவில் யாழ். சிறைச்சாலையின் அதிகாரிகளிடம் இருந்து பொறுப்பேற்றோம்.

அந்த விளக்கமறியல் கைதிகளின் பெயர்கள் இராஜதுரை அப்புத்துரை. எஸ். தில்லைநடராஜா, ஆர். தேவராஜா, ஆர். துரைராஜா, ஆர். தங்கராஜா, மகேந்திரன்.

"இந்த ஆறு விளக்கமறியல் கைதிகளையும் இவ்விரண்டு பேர் கொண்ட சோடியாக கை விலங்கிட்டு கொண்டு வந்தோம். யாழ் சிறைச்சாலையிலிருந்து இந்த விளக்கமறியல் கைதிகளைப்பாரமெடுத்து அவர்களை எனது உதவியாளரான இராஜரட்ணத்துடன் நடத்தியே கூட்டிவந்தேன்.

**பஸ்ஸில் ஏற்றினோம்**

'யாழ்' பஸ் நிலையத்தில் இந்த விளக்கமறியல் கைதிகளை 750 வழி இலக்கம் கொண்ட 23 ஸ்ரீ 5273 இலக்கம்.

(4-ம் பக்கம் பார்க்க)

## மனைவிமார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தியில் பஸ் மறிக்கப்பட்டு 3 கைதிகள் கொலை செய்யப்பட்டதும், ஒருவர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் ஒருவர் தலைமறைவாகி விட்டதும், மற்றுமொருவர்பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதும் தெரிந்ததே.

இவர்களின் மனைவிமார். தாங்கள் கோஷ்டி ஒன்றினால் பயமுறுத்தப்படுவதாக சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரனின் உதவியுடன், யாழ் பொலிஸ் அதிபர் ஜனுப் மஹத்திடம் முறையிட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து வல்லை, கம்பர்மலை போன்ற இடங்களில் ஆயுதப்படையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டுமென்று சட்டத்தரணி லோகேஸ்வரன், பொலிஸ் அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [மா]

## 6 இராணுவ வீரர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

இராணுவ ஜீப்வண்டியும், மாட்டுவண்டியும் நேற்று குருநகர் பீச் றோட்டில் மோதி விபத்துக்குள்ளானதில் ஆறு இராணுவத்தினர் படுகாயம் அடைந்து ஆபத்தானநிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## இன்று புறப்பாடு

[கொழும்பு]

பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் தங்கியுள்ள 600 அகதிகளுக்கும் இந்தியத் தூதரகம் தாயகம் செல்வதற்கான கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கு ஒழுங்குகளைச் செய்துள்ளது.

இவர்களில் 397 அகதிகளை இன்று புதன்கிழமை தாயகத்திற்கு அனுப்புவதற்கு விசேஷ ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏனையோருக்குத் தூதரகம் கடவுச் சீட்டுக்களையும், புனர்வாழ்வு அட்டைகளையும் வழங்கியவுடன், அவர்களை 28ம் திகதி தாயகம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

## வெள்ளவாயா, கம்பஹாவில்:

# பிரயாணிகளிடம் ரூ.1,00,000 கொள்ளை!

[கொழும்பு]

கொழும்பிலிருந்து 42 பிரயாணிகளுடன் அம்பாறைக்குப் புறப்பட்ட வாகனம் வெள்ளவாயாவுக்கு அருகிலுள்ள வெரகல என்ற இடத்திலும், குருநாகலிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட மற்றொரு வாகனம் கம்பஹாவுக்கு அருகில் யக்கல என்ற இடத்திலும் கொள்ளைக்கு இலக்காகியுள்ளன.

இவ்விரு வாகனங்களிலும் பிரயாணஞ் செய்தவர்களின் உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டதுடன், சாரதி, கண்டக்டர் ஆகியோர் கத்திக்குத்துக்குள்ளாகினர்.

அம்பாறை புறப்பட்ட தனியார் பஸ்ஸில் பெல்மதுளையில் வைத்து ஏறிய நான்கு வாலிபர்களும், துப்பாக்கி, வாள், கத்திபோன்ற ஆயுதங்களைக் கொண்டு பிரயாணிகளிடம் சுமார் ஒருலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துள்ளனர். உயிருக்குப் பயந்த பிரயாணிகள் இவர்களிடம் உடமைகளை ஒப்படைத்தனர்.

வெள்ளவாயாவுக்கு அருகில் வைத்து வாகனத்தை நிறுத்தி கொள்ளையர்களை மடக்க முற்பட்டபோது சாரதி பலத்த தாக்குதலுக்குள்ளானார். நான்கு வாலிபர்களும் வெள்ளவாயாவுக்கு அருகில் வாகனத்தை நிறுத்தி தப்பிச் சென்றுள்ளனர்.

இக்கொள்ளை தொடர்பாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டாக தேடுதல் வேட்டையை மேற்கொண்டுள்ளனர். காயத்திற்குள்ளான கண்டக்டரும், சாரதியும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**குருநாகல் கொள்ளை**

குருநாகலிலிருந்து பிரயாணிகளுடன் கொழும்பு புறப்பட்ட பஸ்ஸின் சாரதி கொள்ளையரின் கத்திக்குத்துக்குள்ளானார். இப்பஸ்ஸிலிருந்த பிரயாணிகளிடமிருந்து சுமார் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை இரு வாலிபர்கள் கொள்ளையடித்துள்ளனர்.

யக்கலையில் வைத்து இப்பஸ்ஸில் ஏறிய இரு வாலிபர்களும் கம்பஹாவுக்கருகில் பஸ்ஸை நிறுத்தி தப்பியோடியதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக செய்யப்பட்ட புகாரையடுத்து இராணுவத்தினரும் பொலிசாரும் கூட்டாக தேடுதல் வேட்டையை மேற்கொண்டுள்ளனர். [வெ]

## பேராசிரியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்துகிறது. இவ்விழாவில் இன்று தென்னிந்தியாவில் முன்னணியில் நிற்கும் பேச்சாளரும், இலங்கை மக்களுக்கு திருச்சி வானொலியினால் இரு வெம்பாவை உரைகள் மூலம் அறிமுகமானவருமான திருச்சி நஷனல் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் கலந்து கொள்கிறார்.

## சேவைக்காலப் பயிற்சி வகுப்பு

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை கல்விவட்டாரத்தில் 9-ம், 10-ம் வகுப்புகளுக்கு இந்து சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் இன்று செவ்வாய்கிழமை நடைபெறுகின்றது. இந்து சமய ஆலோசகர் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இப் பயிற்சி வகுப்பு நடைபெறும். [கு]

## இருவர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெட்டர் உடுகம்பல தலைமையில், சார்ஜன் இராசையா, சார்ஜன் ஞானரத்தினம், கான்ஸ்டபிள்கள் யோகராசா, கனகராசா, சந்திரசேனா, பரின், ருவன் பத்திரானா, ஜெயதிலகா ஆகியோரை கொண்ட கோஷ்டியினர், கடந்த இரு தினங்களாக, வவனிக்குளத்திலுள்ள காட்டுக்குள் 3 மைல் தூரம் நடந்துசென்று தேடுதல் நடத்தினர்.

அச்சமயம், சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஒரு காரின் சாரதி செல்லத்துரை ஜெகநாதன், வன்னியசிங்கம் சுப்பிரமணியம் ஆகியோர் மறைந்திருந்தபோது அவர்களை மடக்கிப்பிடித்தனர்.

ஒட்டுமடத்திலுள்ள அப்போதிக்கரி ஒருவரின் வீட்டில் வைத்தே வல்லைவெளி 'நாடகத்'திற்குத் திட்டம் தீட்டப்பட்டதாக பொலிஸ்விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேகநபரான அப்போதிக்கரியையும் பொலிசார் தேடிவருகின்றனர். [க]

## 6 பேருக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இ. சிவராசா, அருணகிரிராசா, நாராயணசாமி, அழகேஸ்வரன், நா. தங்கேஸ்வரன், நா. இலங்கேஸ்வரன், சதாசிவம் சீனிக்குட்டி ஆகிய ஆறு பேருக்குமே நீதவான் பகிரங்க விருந்து பிறப்பித்துள்ளார்.

தொடர்ந்து மரணவிசாரணை இன்று புதன்கிழமை நடைபெறவிருக்கிறது

இவ்விசாரணைக்கு ஆஜராகுமாறு யாழ் சிறைச்சாலை அதிகாரிக்கும் பருத்தித்துறை நீதவான் கட்டளை பிறப்பித்துள்ளார். (மா)

## மன்றின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றத்தில் ஆஜர் செய்யப்படாதது குறித்து சந்தேகநபர்கள் சார்பில் கிளப்பப்பட்ட ஆட்சேபம் தொடர்பாக நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

[தீர்ப்பு விபரம் நாளைய இதழில் வெளிவரும்]


ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

ஆரம்பித்திருக்கும்

**உல்லாச பஸ் சேவை**

யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

**யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுதல்:**

செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில்

**கொழும்பிலிருந்து புறப்படுதல்:**

திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்.

இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: இல: 8310

(2) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்

இல: 6, நவீன சந்தை யாழ்ப்பாணம்.

தொலைபேசி: இல: 7596.

கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்

ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.

தொலைபேசி இல: 89190.

ரவிந்திரா ஸ்டோர்ஸ்

285, காலி வீதி, வெள்ளவத்தை.

J. M. S. மிரான்டாஸ்

109, ஓல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.

நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்

127, காலி வீதி, பம்பலப்பிட்டி

தொலைபேசி இல: 88866

**டிக்கட் விலை: ரூபா 65-00**



வடபிராந்திய போக்குவரத்துச் சபை

**பஸ் வண்டிகளில் விளம்பரம்**

வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ் வண்டிகளின் உள்ளும், புறமும், பிரதான பஸ்தரிப்பு நிலையங்கள் ஆகியவற்றிலும் விளம்பரம் செய்ய விரும்பும் வர்த்தக ஸ்தாபனங்கள், கலை நிலையங்கள் ஆகியவற்றிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விபரங்களுக்கு: க. தனபாலசிங்கம், பொதுசன உறவு நிலை உத்தியோகத்தர், வட பிராந்திய போக்குவரத்துச் சபை, 4ம், குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 214, 215, 7851.

எஸ். கனகரத்தினம்,
தலைவர்,
வடபிராந்திய போக்குவரத்துச்சபை,
யாழ்ப்பாணம்.

1027


இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 308ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஸ்ரீ செப்டம்பர் 23-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper, a the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.